SL

# அழகியல்



700
ஜெயரா

கலாநிதி. சபா. ஜெயராசா

# அழகியல்

கலாநிதி சபா. ஜெயராசா

அம்மா வெளியீடு
இணுவில் - மருதனமடம்

TITLE : **ALAKIYAL**
AUTHOR : **Dr. S. JAYARASAH**, M. A. (Ed.) Ph. D
ADDRESS : Dept. of Education, University of Jaffna.
EDITION : **First 1989**
COPYRIGHT : **Author**
PRINTER & PUBLISHER : **Amma**, Inuvil - Maruthanamadam
PRICE : **Rs. 15 - 00**
SUBJECT : Aesthetics - Psychological Approach

**நன்றி :**

ஆசிரியர்
வீரகேசரி வாரவெளியீடு
திரு. பி. ராஜகோபால்

ஆசிரியர்
அர்ச்சுனு
திரு. வே. வரதசுந்தரம்

அம்மா அச்சகத்தினர்

ஓவியர்
ரமணி

— நூலாசிரியர்

# அழகியல்

அழகு என்பது
மூடுமந்திரமன்று —
ஏனெனில் அந்த மாயமான்
அறிவுத் தடத்தில்
அகப்பட்டுக்கொண்டது.

**அ**ழகு என்பது ஆய்வுப் பொருளாகி விட்டது கற்பனைகளும் காவியங்களும் வாழ்வின் நிஜங்களிலே கொண்டுள்ள வேர்கள் ஆய்ந்தறியப் படுகின்றன. கலைஞனில் ஆரம்பமாகிச் சுவைஞனில் முடிவடையும் தொடர் நிகழ்ச்சிகள் அழகு நிலைப்பட்ட சமூக உளவியலில் நோக்கப்படுகின்றன.

கலைஞனிடத்து நிகழும் கலையாக்கம் தொடர்பான செயற்பாடு கலைப்படைப்பாக வளர்கின்றது. அவற்றிலிருந்து உருவெடுக்கும் கலை அனுபவங்களும் அவற்றின் தாக்கங்களுக்கு உள்ளாதலும் சுவைஞன் சம்பந்தப்பட்ட நிலையாக வளர்கின்றது. அழகியலில் ஈடுபட்டுள்ளோர் கலைப்பொருட்களை உருவாக்குவதிலும், பாதுகாத்தலிலும் ஊடுகடத்தலிலும் பங்கு கொள்

கின்றனர். அழகு என்பது விளக்கத்துடன் இணைந்தது. குறியீடுகளை விளங்கிக் கொள்ளுதலே விளக்கம் என்று பொருள்படும். விளக்கம் முழுமையாகவோ பகுதியாகவோ அமையலாம்.

சமூக உணர்வுகளைப் புரிந்து கொள்வதும் அனுபவிப்பதும் அழகின் பரிமாணங்களாகும். சமூக உணர்வு இரண்டு பிரிவாக விளக்கத்தக்கது. ஒன்று சமூகத்துடன் இயைந்து வாழும் நடைமுறைத்திறன், மற்றையது, சமூக முரண்பாடுகளை விளங்கிக் கொள்ளும் கருத்துநிலை சார்ந்த திறன். ஓர் அமைப்பின் பகுதிகள் எவ்வாறு செயற்படுகின்றன என்ற விதிகளை அடிப்படையாகக்கொண்டு அந்த அமைப்பை முழுமையாக விளக்க முடியும். அதாவது கலையின் பண்புகளை அடிப்படையாகக் கொண்டு அதை உருவாக்கிய சமூகப் பண்புகளை மதிப்பிட முடியும். அனுபவங்களை விளங்கிக் கொள்வதைக் கலைவடிவங்கள் ஊடுகடத்துகின்றன. விளங்கிக் கொள்ளுதல் என்பது சார்புடைய ஓர் எண்ணக்கரு. ஒவ்வொருவரதும் உள அமைப்புக்கும் ஏற்றவாறு விளங்கிக் கொள்ளுதல் வேறுபடும்.

மேற்கூறியவற்றைப் புரிந்து கொள்ள முதலிற் கலைஞன் யார் என்ற கேள்வியை உளவியல் எழுப்புகின்றது. எத்தகைய கலைப்படைப்பும் மனித உழைப்பால் மலர்கின்றது. கலைப் படைப்பை உருவாக்கும் ஒரு நடத்தையை ஒருங்கமைந்த முறையில் மேற்கொள்பவன்



கலைஞன் எனப்படுவான். கலைப்படைப்பு என்றால் என்ன என்பதே இரண்டாவது வினா. கலை வடிவைப் படைப்பவனது செயற்பாட்டுக்கும் அதனைச் சுவைப்பவனது நயத்தலுக்குமிடையே தொடர்பை உண்டாக்கக்கூடிய வடிவமே கலைப் படைப்பு என்று கூறப்படும். இந்நிலையிற் கலை என்பது ஓர் ஊடகமாகின்றது.

அழகியல் தொடர்பான கருத்தை மேலும் விரிவுபடுத்த ''கலை அனுபவம்'' என்றால் என்ன என்ற கேள்வியை எழுப்ப வேண்டியுள்ளது. கலைப்படைப்பில் இருந்து எழுகின்ற தூண்டிகள் சுவைப்பவனிடத்துத் துலங்கலை ஏற்படுத்தும்.

சுவைப்பவனிடத்துக் காட்சி வடிவிலும், மனவெழுச்சி வடிவிலும் ஏற்படுத்தும் தாக்கங்கள் கலை அனுபவங்கள் என்று கூறப்படும்.

கலைப்படைப்பை அனுபவிப்பதால் எத்தகைய விளைவுகள் ஏற்படும் என்ற வினாவைத் தொடர்ந்து முன்வைக்கலாம். சுவைப்பவனது விளக்கம் மேம்படல், அனுபவங்கள் விருத்தி பெறல், ஒழுக்கம் நல்லாற்றுப்படல், வாழ்வுப் பயன் மேலோங்கல் முதலியவை கலைப்படைப்பை அனுபவிப்பதால் எழும் விளைவுகளாகும். மேற்கூறிய விடைகள் அழகியல் தொடர்பான உளவியலின் நுழைவாயிலாக அமைகின்றன. அவற்றை மேலும் விரிவாக நோக்குதல் வேண்டும்.

உளவியல், கலையின் கருத்துப்பற்றி நோக்குகின்றது. கலையின் கருத்து சொல் வடிவிலும் அணுகப்படுகின்றது. சொல் சாராத குறியீடுகள்

வடிவிலும் அணுகப்படுகின்றது. கலைப்பொருளுக்குப் பொதுவான ஒரு கருத்தும் சிறப்பான ஒரு கருத்தும் உண்டென்று கொள்ளப்படுகின்றது. இவற்றோடு எதிர்பார்ப்புத் தொடர்பான ஒரு கருத்தையும் கலைப்பொருள் கொண்டிருக்க முடியும். நடைமுறை வாழ்வுடன் பயன் கொள் முறையிலும் எதிர்பார்ப்புத் தொடர்பான கருத்து எழலாம்.

ஒவ்வொரு கலை வடிவங்களிலும் எவ்வாறு கருத்துக் கொள்ளப்படுகின்றது என்பதை மேலும் நோக்குதல் வேண்டும். முதலில் இசையும் கருத்தும் பற்றி நோக்கலாம். இசைக்குக் கருத்து வழங்க முயன்ற உளப்பகுப்பாளர் மறைந்துள்ள மனத்தின் — அதாவது நனவிலி மனத்தின் சொல்லாடலாக இசை விளங்குகின்றது என்று கூறுகின்றனர். இசையை மனவெழுச்சியின் தூண்டலாகக் கருதும் உளவியலாளரும் உளர். இசையின் கருத்து பல்வேறு மனவெழுச்சிகளையும் முன்னைய அனுபவங்களுடன் தொடர்புபடுத்தித் தூண்டிவிடும் பாங்குடையதென்பது அவர்களின் வாதம். இசை என்பது உளப்படிமங்களின் ஒலி சார்ந்த வடிவம் என்றும் கூறப்படுகின்றது.

அழகியல் தொடர்பான உளவியல் ஆய்வுகள் பார்வைக்கு விருந்தாகும் கட்புலக்கலைகள் மீதும் மேற்கொள்ளப்பட்டன. கட்புலன் வழியாக உள்ளத்தைச் சென்றடையும் தூண்டி மூலையிலே காட்சி அமைப்பு ஆக்கப்படுகின்றது. அதனைப் புலக்காட்சி என்பர். ஒரே படம் வெவ்வேறு



விதமான புலக்காட்சியை வெவ்வேறு சுவைப்பவர்களிடத்து ஏற்படுத்தலாம். மேலும் அறிகைத் தொழிற்பாடுகள் விருத்தியடைய கட்புலக்கலைகள் தொடர்பான புலக்காட்சியும், கருத்துக் கொள்ளலும் வளர்கின்றன.

கட்புலக் கலைகளிலே பயன்படுத்தப்படும் தொடர்பு ஊடகம் பலவகைப்பட்டும், எண்ணிறந்த முடிவிலியாயும் அவ்வடிவங்கள் வளர்ந்து செல்லும். தொடர்பு ஊடகம் சுவைப்பவனிடத்துப் புலக்காட்சியை உருவாக்குகின்றது. வண்ணம், வடிவம், பருமன், ஒளிப்பண்பு என்றவாறு அமைக்கப்படும் தொடர்பு ஊடகம் எண்ணிறந்ததாக உள்ளது. கருத்தைப் பிரதிநிதித்துவப் படுத்தல், மனவெழுச்சியைத் தூண்டல், போன்றவை அவற்றின் தொடர்புப் பண்புகளாயுள்ளன. சூக்கும ஓவியங்களில் தருக்கமுறையான கருத்துப் பண்பிலும் பார்க்க மனவெழுச்சித் தூண்டலே மேலோங்கி நிற்கும் என்பது பொதுவான கருத்து.

சூக்கும ஓவியங்கள் தொடர்பான ஒரு சிக்கலான நிலை எழுவதையும் சுட்டிக் காட்ட வேண்டியுள்ளது. புகழ்பெற்ற ஓவியர்கள் வரைந்த சூக்கும ஓவியங்களும், ''சிம்பன்சி'' எனப்படும் மனிதக்குரங்குகள் வரைந்த ஓவியங்களும் யார் குறித்த ஓவியங்களை வரைந்தார்கள் என்ற அறிவுறுத்தல் இன்றி சுவைஞர்களுக்குத் தரப்பட்டன. மனிதக்குரங்குகள் வரைந்த சூக்கும ஓவியங்கள் தமக்குப் பிடித்ததாக சுவைஞர்கள்

பலர் கூறினர். அழகியல் தொடர்பான விரிவான உளவியல் ஆய்வுகள் வேண்டும் என்பதை இந்த நிகழ்ச்சி வற்புறுத்தியது.

இலக்கியங்களின் கருத்து விளக்கத்தில் முதன்மையான இடத்தைப் பெறுவது மொழி. மொழி சார்ந்த கருத்து விளக்கத்தில் மரபு சிறப்பிடம் பெறுகின்றது. ஒவ்வெரு மொழியும் அவற்றிற்குரிய பண்பாட்டு வரலாற்றிேேடு இணைந்த மரபுடன் இணைந்துள்ளது. இதனுல் ஒரு மொழியிற் கூறப்பட்ட கருத்தை இன்னெரு மொழியிற் கருத்தாக்கம் செய்வது மிகுந்த கடினம். ஒவ்வொரு சொல்லுக்கும் ஒரு வெளிப்படையான கருத்து இருந்தல் போன்று உள்ளார்ந்த கருத்தும் உண்டு. மேலும் வசனத்தில் அமையும் சொல் இடைவினை செலுத்தும் சொல்லாக விருத்தியடையும். பொருள் மாத்திரமன்றி குறித்த சொல்லில் இருந்து எழுகின்ற ஓசைக்கும் அழகியற் கருத்து உண்டு. யாப்பு இந்தத் தொடர்பை மேலும் வலியுறுத்துகின்றது.

கலைப்பொருளைச் சுவைப்பவனிடம் 'மறைந்துள்ள கருத்து' என்பதும் உண்டென்பதை மறுக்க முடியாது. ஒவ்வொருவரிடத்தும் ஒவ்வொருவிதமான மறைகருத்து உருவாகலாம். இவ்வாறு உருவாகும் மறைகருத்து சார்பான நிலையிற் குதூகலத்தைக் கொடுக்கும். சமூகத்தின் விளைபொருளாகிய மொழி அழகியலைப் புலப்படுத்தும் பண்பு கொண்டது. உளவியலையும் மொழியியலையும் ஒன்றிணைக்கும் புலம்



''உளமொழி இயல்'' எனப்படும். அழகியலிற் சமூக உளமொழி இயல் பற்றி நோக்கப்படும்.

மொழி என்பது தொடர்பு கொள்ளல் என்பதிலும் மேலான இடத்தைப் பெறுகின்றது. அறிகை, உள எழுச்சி ஆகிய பண்புகள் மொழி வாயிலாக வழங்கப்படுகின்றன. அனுபவங்களை விளக்குதல், இனங்காணல், வகைப்படுத்தல், நியமங்களுடன் தொடர்புபடுத்தல், அனைவருக்கும் விளங்கும் வண்ணம் அகிலப்படுத்தல், முதலியவை மொழியால் மேற்கொள்ளப்படுகின்றன. புலக்காட்சி கொள்ளல், சிந்தித்தல், அறிவையும் அனுபவங்களையும் தேக்கி வைத்தல், ஊடுகடத்தல் முதலிய செயற்பாடுகள் மொழியால் மேற்கொள்ளப்படுகின்றன.

கலைப்பொருளைக் கூறுபவனது உணர்ச்சி புலப்பட மொழி பயன்படுத்தப்படலாம். இந்த நிலை மொழியின் ஒருபக்கத் தொடுகையைக் குறிக்கின்றது. கலைப்பொருளை விளக்கிக் கொள்வோனை மட்டும் கருத்திற் கொண்டு மொழியைக் கையாளலாம். இந்த நிலை மொழியின் மறுபக்கத் தொடுகையை வெளிப்படுத்துகின்றது. மேற்கூறிய இரண்டு நிலைகளோடும் உடன்பாடு கொள்ளத்தக்க ''ஒப்பந்தநிலை'' யிலும் மொழியைப் பயன்படுத்த முடியும். மொழியை மொழிக்காகப் பயன்படுத்தும் பிறிதொரு தொடர்பும் உண்டென்பதை நினைவுகொள்ளல் வேண்டும். ஆரம்ப காலத் தமிழ்ப்புனை கதையாளர் சிலர் பேச்சு மொழியைக் கைவிட்டு ''இலக்கண சுத்தமாக''

எழுதினர். அழகியலில் மொழியை மாற்றியமைப்பதற்கான பிறிதொரு செயற்பாடும் நிகழ்ந்த வண்ணமிருக்கும். சொல் கடந்த முறையிலும் தொடர்புகள் மேற்கொள்ளப்படுகின்றன. உடலசைவுகள், சைகைகள், முத்திரைகள் என்பவை சொல் கடந்த தொடர்பு கொள்ளலுக்கு எடுத்துக் காட்டுகளாகும்.

கலைப்படைப்பை ஏன் சுவைஞன் விரும்புகிறான்? கலைப்படைப்புகளின் தரச்சிறப்பை அவன் எவ்வாறு தீர்மானிக்கின்றான்? என்பவை நோக்கப்பட வேண்டியுள்ளன.

கலைப்படைப்பைச் சுவைத்தல் சமூக வரலாற்றோடும், சமூகக் கற்றலோடும் இணைந்து செல்லும். கலைப்படைப்பைச் சுவைப்பதால் எழும் நிறைவு ''அழகியல் சார்ந்த திருப்தி'' எனப்படும். கலைப்படைப்பின் உள்ளார்ந்த வலு திருப்தியை மேலோங்கச் செய்கின்றது. திருப்தி தராத கலைகள் பற்றாக்குறை நிலையிலுள்ளதாகக் கொள்ளப்படும். ஒருவனது நடத்தையில் நிகழும் மாற்றங்களை அறிவதன் வாயிலாகத் திருப்தியை மட்டிடலாம். ஒருவன் எவ்வாறான கலைப் பொருள்கள் மீது நாட்டங் கொள்ளுகின்றான் என்பது அவனுக்குக் கிடைக்கும் கலைத்திருத்தியுடன் தொடர்புடையது.

உலகியல் தொடர்பான கலைத்திருப்தி, ஆன்மீகம் தொடர்பான கலைத்திருப்தி என்றவாறு கலைத்திருப்தி பாகுபடுத்தப்படும். உலகியல் தொடர்பான கலைத்திருப்தி வாழ்வின் முரண்பாடுகளை உள்ளுணர்வுடனும், கருத்து நிலைத் தெளிவுடனும் புனையும் கலைப்படைப்பிலிருந்து பெறப்படும். ஆன்மீகம் தொடர்பான கலைத் திருப்தி நம்பிக்கைகளின் அடிப்படையாகப் பிறக்கின்றது.

கலைப்படைப்பில் நயப்பை ஏற்படுத்தும் தூண்டியைப் பற்றிய ஆய்வுகளும் உளவியலில் மேற் கொள்ளப்படுகின்றன. எந்த வண்ணம் கூடுதலாக விரும்பப்படுகின்றது, எத்தகைய வடிவம் கூடுதலான அழகியல் உணர்வை ஏற்படுத்துகின்றது, என்பவை தொடர்பாகப் பரந்த ஆய்வுகள் உளவியலில் மேற்கொள்ளப்பட்ட பொழுதிலும், திட்டவட்டமான முடிவுகளைப் பெறமுடியாமல் இருக்கின்றது. இந்நிலையில் அழகியல் ஆய்வுகளைப் பொறுத்தவரை உளவியல் இன்னமும் குழந்தை நிலையில் இருக்கின்றதா என்ற கேள்வியும் எழுப்பப்படலாம். உளவியல் அணுகுமுறை முழுமை அடைய, அதனை வரலாற்றுப் பொருள் முதல்வாதத்துடன் இணைக்க வேண்டியுள்ளது. இதனது விரிவைப் பின்னர் நோக்கலாம்.

பல வண்ணங்களினாலே தீட்டிய ஓவியமும் அழகாக இருக்கின்றது. ஒரே ஒரு வண்ணத்தினாலே தீட்டிய ஓவியமும் அழகாகத் தான் இருக்கிறது. வண்ணம் என்ற ஒரு மாறியை வைத்துக்கொண்டு உளவியல் தொடர்பான முடிவை எடுக்க முடியாது. பல்வேறு மாறிகளை

தொகுப்பதன் வாயிலாகவே அழகியல் நயப்புப் பற்றிய விளக்கங்களைப் பெற முடியும் என்பது தெளிவாகின்றது. அதாவது உளவியலின் எல்லைகள் மேலும் விரிவாக்கப்பட உள்ளன.

சுவைப்பவனுக்கும் கலைப் பொருளுக்குமுள்ள தொடர்பு ஆராயப்படுதல் போன்று கலைப் பொருளுக்கும் அதனை ஆக்கியவனுக்கு மிடையே உள்ள தொடர்புகள் ஆராயப்படுதலும் அழகியல் விளக்கம் பெறுதற்கு அவசியமாகின்றது. இதனை மேலும் நோக்குவோம்.

# அழகியலும் ஆக்கத்திறனும்

**அழகுக்கு மாறுவேஷமில்லை**
**ஏனெனில்**
**அதற்குள்ளே வேஷங்கள்**
**உண்டு —**
**அவை**
**பலகோடி முரண்பாட்டில்**
**வேர் பதிக்கும்**
**மாணிக்கக் குவியல் —**

புதியது புனைதல் ஆக்கத்திறன் எனப்படும். ஆக்கத்திறனை உருவாக்குதலோடும் சுவைத்தலோடும் அழகியல் இணைந்துள்ளது. தற்படைப்பு, தானே தொடங்கும் ஆற்றல், கூரியநோக்கு,



தழுவும்திறன், ஆகிய பண்புக்கூறுகள் ஆக்கத் திறனில் அடங்கும். பன்முகத் தோற்றப்பாடு களைக் கொண்டது ஆக்கத்திறன். சாதாரண ஒரு சிறிய கலைப் பிரச்சினைக்குத் தீர்வு காணுதல் என்பதிலிருந்து, ஒருவனது உளவலு முழுமையாக வெளிப்படும் கலைத்திறன் வரை ஆக்கம் விரிவடையும்.

ஆக்கத்திறனில் ஒரு பிரிவாக அமைவது, "ஆக்கச் செயல் முறை"யாகும். ஒரு பிரச்சினையை உணரும் பொழுது ஆக்கச் செயல் முறை இயங்கத் தொடங்குகின்றது. அறிவதற்குரிய உயர்ந்த ஆயத்த நிலையாக அது கொள்ளப் படும். ஒரு புதிய கோணத்தில் ஆக்கத்திறனுடை யவன் காட்சி பெற முயல்வான். பிரச்சினை களுக்குரிய தீர்வுகள் ஆக்கத்திறனுடையவனின் மனத்தை உறுத்திய வண்ணமிருக்கும். முரண் பாடுகள் நிறைந்த சூழலிலே திருப்தி பெறாதவனாக அவன் இருப்பான். இதனை "நிருமாண மனநிறை வின்மை" என்றும் குறிப்பிடுவர். இந்நிலையில் ஆக்கத்திறன் முனைப்பு வேறு கோணங்களிற் பிரச்சினையை அணுகி நிற்கும். பழைய வரை யறைகளை மாற்றி அமைத்துப் புதிய வரையறை ஒன்றினை உருவாக்குதலும் அந்த முனைப்பின் செயற்பாடாக விளங்கும்.

இத்தொடர்பில் "குவி சிந்தனை", "விரி சிந்தனை" என்ற இரு எண்ணக்கருக்கள் விளக்கப் படுகின்றன. ஒருவர் தமது சிந்தனையை வழக்க மான செயற்பாடுகளில் இருந்து விலக்கி கூடுமான

வெளிப்பாடுகளை உண்டாக்கும் திறன் விரிசிந்தனை எனப்படும். இதற்கு மாறுபாடானது குவி சிந்தனையாகும். வழக்கத்திலுள்ள ஒரு கருத்தின் அடிப்படையில் சிந்தனையை ஓடவிட்டு ஒரு தீர்வைக்காண்பது குவிசிந்தனையாகும். இருவித சிந்தனையமைப்பு மாதிரிகைகளும் ஆக்கத்திறன் செயற்பாட்டில் விசை கொண்டு இயங்கும்.

ஆக்கத்திறன் முனைப்பு, மொழி மூலகங்களைப் புதியவகையில் இணைக்கும் திறன் கொண்டிருக்கும். புதிய உவமைகள், உருவகங்கள், குறியீடுகள் முதலியவை இவ்வாறு உருவாக்கப் படுகின்றன. ''அக்கினி'' ''பேனு'' ஆகிய இரு எண்ணக்கருக்களையும் ஒன்றிணைத்து ''அக்கினிப் பேனு'' என்ற புதிய இணைப்பு ஆக்கப்படுகின்றது. இணைப்புக்களின் எண்ணக்கருக்கள் ஒன்றுக் கொன்று எவ்வளவு தொலைவில் நம் உள்ளத்தில் விலகி இருக்கின்றனவோ அந்த அளவுக்கு அவை ஆக்கத்திறன் உள்ள அமைப்பாக மாறும்.

ஆக்கத்திறன் வழியாக உருவாக்கப்படும் விளைபொருள் ''ஆக்க விளைபொருள்'' எனப் படும். ஆக்க விளைபொருள் ஒலி அல்லது ஒளிக் காட்சி வடிவானது. ஆக்க விளைபொருளின் முக்கிய பண்பு அது புதுமையாக அல்லது நூதனமாக அமைந்திருத்தலாகும். ஆக்க விளை பொருள் புதுமையாக இருத்தல் மட்டுமன்றி, பயனுடைமை கொண்டும் விளங்குதல் வேண்டும்.



ஆக்கத்திறன் முனைப்பு அழகுப் பொருளை உண்டாக்குகின்றது. அழகுப் பொருள் வெற்றிடத்திலே தோன்றுவதில்லை. வாழ்க்கையின் வரலாற்றுத் தொடர்ச்சியும், முரண்பாடுகள் பற்றிய உணர்வும் ஆக்கச் சூழலைப் பிறப்பிக்கின்றன. மனிதனைப் புதுப்பிக்கவும், சமுதாயத்தைப் புதுப்பிக்கவும் மட்டுமன்றி, அவற்றை மாற்றி அமைப்பதற்கும் ஆக்கத்திறன் முனைப்புத் துணை புரிகின்றது. நவீன கணனிப் பொறிகளுடன் ஒப்பிட்டு மனித மேன்மையை விளக்குவதற்கு ஆக்கத்திறனே உரைகல்லாகின்றது.

ஆக்கத்திறன் முனைப்பு ஒரு சிலரின் பாற்பட்டதன்று. மனிதர்கள் அனைவருக்குமுரிய ஓர் ஆற்றல் அதுவென்று கொள்ளலாம். சூழலும், சந்தர்ப்பங்களும் அவற்றைப் பாரிய விருட்சமாக வளர்த்துவிடும். வாழ்வியல் என்பது ஒத்திசைவு தராவிடில் ஆக்கத்திறன் முளையிலே கிள்ளப்பட்டு விடும்.

ஆக்க உந்தல், கலைப்படைப்பை மலர்விக்கின்றது. இச்சந்தர்ப்பத்திற் கலைஞர்களின் ஆளுமைப் பண்புகள் பற்றியும் உளவியல் நோக்குகிறது. பொதுவாகக் கலைப்படைப்பைத் தருபவர்கள் தனித்துவ நோக்கு உடையவர்களாகவும், சூழலின் முரண்பாடுகளை ஆழமாகவும், வேகமாகவும் உள்வாங்கிக் கொண்டு புலக்காட்சி கொள்பவராகவும் விளங்குவர். அவர்கள் முடிவுகளைச் சுதந்திரமாகத் தீர்மானிப்பவர்களாகவும், தமது உணர்வுகளைக் கலைவடிவிலே வெளிப்

பாய்ச்சல் செய்பவராகவும் விளங்குவர். அவர்களது ஆளுமை சமூகப் பொறுப்போடு இணைந்து நிற்கும். முடங்கிக் கிடக்கும் உள் உணர்வுகள் வெளிப்படும் பொழுதும், பிறரால் நுகரப்படும் பொழுதும், அவற்றின் வாயிலாக உளத் திருப்தியைப் பெறுபவர்கள். மேற்கூறியவை பொதுப்பண்புகளாக இருப்பினும், கலைஞனது தனித்துவத்துக்கேற்ற வேறுபாடுகளையும் நோக்க முடியும்.

படைப்பாற்றலின் விருத்தி நான்கு உள நிலைகளாக நடைபெறுவதாக உளவியலிலே கொள்வர். அவை:-

(அ) ஆயத்த நிலை
(ஆ) அடைகாக்கும் நிலை
(இ) ஒளிரும் நிலை
(ஈ) மீட்டுப் பார்க்கும் நிலை

புற முரண்பாடுகளை உள் வாங்கிய மன எழுச்சி பூர்வமான நிலை ஆயத்த நிலையாகக் கொள்ளப்படும். ஆக்கத்தின் தன்மை, விளைவு என்பவற்றிலும் பார்க்க எடுத்துக்கொண்ட பொருள் பற்றிய தரவுகள் தொகுப்புகள் ஆகியவை ஆயத்த நிலையில் மேலோங்கி நிற்கும்.

முன்னர் பெற்ற தகவல்களை பிற தகவல்களுடன் ஒன்றிணைக்கும் ஆழ்மனத் தொழிற்பாடுகளுடன் அடைகாக்கும் நிலை இணைந்து நிற்கும். தகவல்கள் உள்ளத்திலே செப்பனிடப்பட்டும், மெருகூட்டப்பட்டும் ஒருவித 'விருத்தி' அப்



பொழுது ஏற்பட்டுக்கொண்டிருக்கும். அடைகாக்கும் நிலை சில மணித்தியால வீச்சைக் கொண்டதாகவும் அமையலாம். பல வருட நீடிப்பைக் கொண்டதாகவும் விளங்கலாம். பல ஆண்டுகளாக நீடித்த தவிப்பின் பின்னர் ஓவியம் வரைந்தவர்களும் இருக்கின்றார்கள்.

ஒளிரும் நிலை முரண்பாடுகளுக்குரிய விளக்கம் பெறும் நிலையாகும். தகவல்கள் புதிய வடிவுகளில் இணைக்கப்படும். கிட்டியதான ஒரு தீர்வு உணரப்படும்.

மீட்டுப் பார்க்கும் நிலை உள்ளத்துப் பதிவுகளை யாதாயினும் ஓர் ஊடகத்தின் வழியாக வெளிப்படுத்தும் கட்டமாக அமைகின்றது. மெய்ம்மையும் கற்பனையும் இக்கட்டத்தில் ஒன்றிணைகின்றன. இந்நிலையிற் கலைஞன் கலைப் படைப்பை உருவாக்குகின்றான்.- விஞ்ஞானி ஒரு புத்தகத்தைத் தருகின்றான்.

மேற்கூறிய உளத் தொழிற்பாட்டு நிலைகள் ஒவ்வொருவரதும் தனியாள் வேறுபாடுகளுக்கேற்ற மாற்றமும் நெகிழ்ச்சியும் பெறலாம். அவற்றைத் தனியாள் ஆய்வுகளில் இருந்து விளக்கவேண்டும்.

# கலை வெளியீட்டுத் திறன்

உணர்வுகள்
ஒரு கோடை விடுமுறையைக்
கழித்த பின்
மஞ்சத்தில் உலாவரும் —

உணர்வுகளை வெளியிடுதல் கலைஞனுக்கு மகிழ்ச்சியைக் கொடுக்கின்றது. உள் வாங்கிய காட்சிகளே வெளியிடப்படுகின்றன. உணர்வுகளை உள்வாங்குதல் என்பது கருத்து, மனவெழுச்சி என்ற இரு பரிமாணங்களைக் கொண்டிருக்கும். கலைஞனது உள்ளத்திலே பதிந்தவை மனவெழுச்சியாயும், கருத்தேற்றமாயும் இணையாத தூய வெளிப்பாடு என்பது காணப்பட மாட்டாது. ஏனெனில் மனவெழுச்சியும் கருத்தும் பின்னிப் பிணைந்தவையாகும்.

அனுபவித்த ஒரு தாக்கத்தை உடனடியாகக் கலைவடிவ வெளியீடு ஆக்குவதற்கும் தாமதித்துக் கலைவடிவமாக்குவதற்குமிடையே வேறுபாடு காணப்படும். இவை தொடர்பாக உளவியற் பரிசோதனைகள் நடத்தப்பெற்றன. தாக்கத்தை அனுபவித்தவுடன் ஆக்கப் பெறும் கலை வடிவங்



களில் மனவெழுச்சிக் குமுறல்கள் மிகையளவில் காணப்படுகின்றன. தாமதித்த நிலையில் ஆக்கப் பெறும் கலைவடிவங்களில் மனவெழுச்சி ஒருவித ஒழுங்கமைப்புடன் காணப்படுகின்றது.

வெளியிடப்படும் கருத்தும், மனவெழுச்சியும் அழகுப் பெறுமானத்தைக் கொள்வதற்குக் கற்பனை துணை செய்கின்றது. உதாரணமாக சூக்கும இசை, கணிதக் குறியீடுகள் போன்று அமைந்திருந்தாலும், அங்கு கற்பனைக்கு இடமளிக்கப்படும்பொழுது கலை வெளியீட்டுத்திறன் மேலோங்கி நிற்கும்.

கலை வெளியீட்டுத்திறனை நுணுகி நோக்கும் பொழுது மேலும் இரு பண்புகளைச் சுட்டிக் காட்ட வேண்டியுள்ளது. அவை, முதற்கட்ட அமைப்பு, இரண்டாம் கட்ட அமைப்பு என்பன. முதற்கட்ட அமைப்புக்கு எடுத்துக்காட்டாக இசையிற் குரல் வளத்தைக் குறிப்பிடலாம். கவிதையில் ஓசையையும் குறியீட்டுப் பண்பையும் குறிப்பிடலாம். இரண்டாம் கட்ட அமைப்பு கலை வெளியீட்டில் அமைந்துள்ள அகல்விரி பண்பாகும். அகல்விரி பண்பு என்பது கலை வெளியீட்டின் வாயிலாக ஒன்றிணைத்து வைக்கப்படும் பல்வேறு தொடர்புகளையும் குறிப்பிடுகின்றது. இசையை உதாரணமாக கொண்டு இதனை விளக்கலாம். நல்ல குரல்வளத்துடன், கருத்துள்ள பாடல், இசைக் கருவிகளின் ஒன்றிணைப்பு, ஆற்றொழுக்குப் போன்ற 'தோய்தல்'

இல்லாத பாய்ச்சல் என்றவாறு பல்வேறு பண்புக் கூறுகள் தொடர்பு பட்டு நிற்றல் 'அகல்விரி' ஆக்கம் எனப்படும்.

கலை வெளியீடு என்பது ''பயன்'' என்ற பண்பைக் கொண்டிருத்தல் வேண்டும். பயன் என்ற பிரிவில் வெளியீட்டின் கருத்து, உட்பொருள், நடைமுறையில் அதன் நன்மை என்பவை நோக்கப்படுகின்றன. பயன் தரும் பண்பை மேலோட்டமாக அணுக முடியாது. வீட்டு முற்றத்திலுள்ள பூமரங்களைத் தறித்து வீழ்த்திக் காய்கறிச் செடிகளை நடுபவனது மனோ நிலையில் நின்று கலைப்பொருட்களின் பயனை அளவீடு செய்ய முடியாது. அல்லது, நில அளவைப்படமானது நிலக்காட்சி ஓவியத்திலும் பார்க்கக்கூடிய நடைமுறைப் பயனுடையது என்று கூறும் மனோபாவத்துடனும் கலைப் பொருளின் பயனை மதிப்பீடு செய்ய முடியாது.

கலை வெளியீட்டுத்திறனிற் காணப்படும் பிறிதொரு பண்பு அதன் ''செலவு'' என்பதாகும். செலவு என்பதன் பொருள் குறித்த கலைப்பொருளின் ஆக்கத்துக்கு உள்ளீடாக அமைந்த மனித உழைப்பாகும். மிகுந்த பிரயத்தனப்பட்டு ஆக்கப் பெறும் கலைப்பொருள் அதிக உழைப்பால் உருவாகின்றது. இந் நிலையில் உழைப்புக்கும் அழகுக்குமிடையே தொடர்பைக் காண முடிகிறது. நீண்ட கல்விக்கும் பயிற்சிக்கும் பின்னர் அரங்கேறும் ஒரு நடனத்தின் அழகிலும் மெருகிலும் உழைப்பின் தொடர்பைத் தெளிவாகக் காணலாம்.



கலைப்பொருளாக்கத்திற் பொதிந்துள்ள உழைப்பின் தொடர்பு நாட்டார் மரபுகளிலே தெளிவாக விளக்கப்படுகின்றது. 'ஆடல் அறியா அரங்கு', 'கேள்வி ஞானம்' 'சித்திரமும் கைப் பழக்கம்' போன்ற தொடர்கள் மறைமுகமாகவும், நேர்முகமாகவும் கல்வியோடும் பயிற்சியோடும் இணைந்த உழைப்பின் இன்றியமையாப் பண்பைக் கலைகளிலே புலப்படுத்துகின்றன. திறன்களைக் கற்றுக் கலைப்பொருளைப் படைப்பவனது ஆக்கங்களில் அழகும் மெருகும் சிறந்து நிற்கும்.

மனித உழைப்போடு இணைந்த பிறிதொரு பண்பு 'சிக்கனம்' என்பதாகும். கட்டுச் செட்டாகக் கூறல், குறைந்த முயற்சியுடன் கூடிய விளைவை உருவாக்குதல், என்றவாறு சிக்கனம் விளக்கப்படுகின்றது. கவிதை என்பது மொழிச்சிக்கனத்தின் வடிவம் என்று கொள்ளப் படும். கட்டடக் கலையிற் காணப்படும் ஒரு சிக்கனப் பண்பு கூராக அமையும் அதன் கூரையாகும். சக்தியைச் சிக்கனமாகப் பயன் படுத்தலின் வடிவம் அதுவென்று கூறுவர்.

கலைஞன் சுவைஞன் ஆகியோரது புதிய புதிய அநுபவங்கள், தேடல்கள் ஆகியவை வெளியீட்டிலும், கலை நயப்பிலும் புதிய புதிய சமநிலைகளை உருவாக்கும். ஒரே இராகத்தை இசைக் கலைஞன் திரும்பத் திரும்ப இசைக்கும் பொழுது அவனுக்குச் சலிப்பு ஏற்படாதிருப்பதற்குக் காரணம் அவனிடத்து உருவாகும் புதிய புதிய

உளச் சமநிலையாகும். சுவைஞனும் ஒரே இராகத்தைத் திரும்பத் திரும்பக் கேட்கின்றான். அவனிடத்துப் புதிய உளச் சமநிலை தோற்றுகையில் சலிப்பு ஏற்பட இடமில்லை.

சூழலின் முரண்பாடுகளிலிருந்து மனித மூளையிலே சமநிலைகள் உருவாக்கப்படுகின்றன. முரண்பாடுகளின் வழியாகப் பிறக்கும் தொடர் இயக்கங்கள் சமநிலைகளை நிரந்தரமான ஒரு வடிவில் வைத்திருக்க மாட்டா. இயக்கம் தொடர்ந்து நிகழ, பழைய சமநிலைகள் குலைதலும் புதிய சமநிலைகள் உருவாதலும் என்ற முடிவிலா நிகழ்ச்சி தொடர்ந்து கொண்டிருக்கும்.

பேச்சுக்கலைஞன் ஒரே தலைப்பிற் பல மேடைகளிற் பேசும் பொழுது, தலைப்பு ஒன்றாக இருந்தாலும் வெளியீட்டுத்திறன் மாற்றமடைந்த வண்ணம் இருக்கும். மாற்றம் நிகழாவிடில், சலிப்பு ஏற்பட்டு விடும். புதிய உளச் சமநிலைகள் தோற்றுவதைக் கலைவெளியீட்டுத்திறனில் நிகழும் மாற்றங்கள் புலப்படுத்தும்.

எழுத்தாக்கங்களை எழுதி முடித்த முதலாவது வரைபில் அப்படியே பிரசுரிக்கலாகாது என்ற கருத்தும் உண்டு. காலம் தாழ்த்தும் பொழுது எழுத்தாளனது உளச்சமநிலைகள் மாறும். இயைபான திருத்தங்களை மேற்கொள்ள நேரிடும். அவற்றால் ஆக்கம் பொலிவு பெறும். பல்வேறு உளச்சமநிலைகளின் மாற்றங்களை உள்வாங்கி ஒரு கலைப்படைப்பு முகிழ்த்தெழும் பொழுது



வெளியீட்டுத்திறன் மெருகு பெறுகின்றது. ஒரு திரைப்படத்தின் நிஜமான தயாரிப்பு வடிவம் அதனை வெட்டி கோவைப் படுத்தும் கலையகத்திலே தான் நிகழ்கின்றது. திரைப்படம் பிடிக்கப்படும் காலத்துக்கும் வெட்டிக் கோவைப் படுத்தும் காலத்துக்கும் இடையே இயக்குநர் பல்வேறு உளச்சமநிலை மாற்றங்களை அனுபவிக்க நேரிடுகின்றது.

வெளியீட்டுத்திறன் 'நிலைமாற்றம்' என்பதுடன் தொடர்புடையது. கலைஞன் தான் கண்ட காட்சியைப் பிரதியெடுத்தல் போன்று வெளியிடுவதில்லை. காட்சி என்பது பண்பு நிலையான ஒரு மாற்றத்துடன் கலைவடிவாக்கப்படுகின்றது. இதுவே உளவியலில் 'நிலைமாற்றம்' என்று கூறப்படும். காட்சியைப் பிரதியெடுத்துத் தருதல் ஆவணப்படுத்தல் அல்லது செய்தித் தரவாக்கல் என்று கூறலாம். காட்சிகள் மனப்பதிவாகின்றன. மனவெழுச்சிகளும் கருத்தும் காட்சிகளுடன் ஒன்றிணைகின்றன. கற்பனைகள் அவற்றுடன் கலக்கின்றன. கலைஞனின் கருத்துநிலை அவற்றை ஒழுங்கமைக்கின்றது. அவற்றைத் தொடர்ந்து கலைவெளியீடு நிகழ்கின்றது. அவ்வாறு நிகழும் உளச் செயற்பாடுகளே 'நிலைமாற்றம்' எனப்படும்.

ஓர் ஆவணத் திரைப்படத்துக்கும் ஒரு கலைத் திரைப்படத்துக்குமுள்ள வேறுபாடு மேற்கூறிய நிலைமாற்றத்தினால் விளக்கப்பட முடியும்.

# அழகியலும் மனவெழுச்சியும்

அந்த நீண்ட மனவெளியில்
ஒவ்வொரு பூக்களும்
நீந்திச் சிறகடிக்கும்—

**க**லையாக்கம் மனவெழுச்சிகளின் வடிவம் எனப்படும். மனவெழுச்சிகளைப் புனையாத கலைப் படைப்பு சத்தும் சுவையும் அற்றதாகிவிடும். மனித வரலாற்றோடு மனவெழுச்சிகளின் வரலாறும் விருத்தியடைந்து வருகின்றது. மனிதனது குழு இயக்கமும் மனவெழுச்சியும் பிரிக்க முடியாத வடிவங்களாகவுள்ளன, மகிழ்ச்சி, சினம், அச்சம், அன்பு போன்ற அடிப்படை மனவெழுச்சிகள் மனித வாழ்வின் உயிர்ச் சுவைகளாகக் கொள்ளப்படும். வாழ்க்கைப் போரில் அவை மனிதருக்கு துணைநின்று வந்துள்ளன.

சமூக முரண்பாடுகளின் மத்தியிலே நிகழ்ந்த சாதனைகளும், கோரச் செயல்களும் மன வெழுச்சிகளை வளர்த்தும் மழுங்கடித்தும்



வந்துள்ளன. நீண்ட நெடிய மனித வரலாற்றின் உளவியல் நிலைப்பட்ட விளைபொருளே மன வெழுச்சிகள்.

மனவெழுச்சியைக் குறிக்கும் ஆங்கிலச் சொல்லாகிய 'இமோஷன்' என்பது 'இமோவரே' என்ற இலத்தீன் சொல்லை மருவி எழுந்ததாகக் கூறுவர். இதன் பொருள் செயலைத் தூண்டி விடல் அல்லது செயலை அருட்டிவிடல் என்பதாகும். நடத்தைகளுக்குரிய வலுவளிப்பதுடன் மனவெழுச்சி தொடர்புடையது. ஒருவனுடைய உடல், உள்ள உணர்வுகளை மனவெழுச்சி அருட்டி விடுகின்றது.

கலை இலக்கியங்கள் மனவெழுச்சிகளை உருவாக்குதலுடன் தொடர்புடையவை. கலைப்பாத்திரங்கள் மனவெழுச்சியின் வடிவங்களாக வளர்த்துக் காட்டப்படுகின்றன. மனவெழுச்சியின் போது முகபாவனையில் மாற்றங்கள் நிகழ்கின்றன. கண், மூக்கு, உதடு, நெற்றி ஆகிய முக உறுப்புகளில் நுண்ணிய தசை நார்களில் மாற்றங்கள் ஏற்படும். பாத்திரங்களை விவரிக்கும் கலைஞன் இவற்றைக் கூர்ந்து நோக்குகின்றான்.

மனவெழுச்சிக்கும் குரல் வெளிப்பாட்டின் மாற்றங்களுக்குமிடையே தொடர்பு காணப்படும். அச்சத்திலே குரல் குமைதலும் மகிழ்ச்சியிலே குரல்மிகை பெறுதலும் குறிப்பிடக்கூடிய நிகழ்ச்சிகளாகும். மேலும் இச்சந்தர்ப்பங்களில் குருதி அழுத்தத்திலும் மாற்றங்கள் நிகழ்கின்றன. இதயத்துடிப்பு, சுவாசித்தல், என்பவை

விசை பெறுகின்றன. எதிரிடையான தசை நார்கள் ஒரே சமயத்தில் சுருங்க நேரும்பொழுது நடுக்கம் ஏற்படும். மயிர்க் கூச்செறியும். புல்லரிப்பு உண்டாகும். வியர்வைச் சுரப்பிகள் வேகமாகச் சுரந்து வியர்வையினை உண்டாக்கும். இதனால் தோலின் மின்தடை குறைகின்றது. சாதாரணமாக மூளையிலிருந்து வெளிப்படும் கூடிய அலைவெண்களைக் கொண்ட 'அல்பா' அலைகள் குறைந்த அலைவெண்களைக் கொண்ட 'டெல்ரா' அலைகளாக மாற்றமடையும்.

மனவெழுச்சிக்குக் காரணமான தூண்டல்கள் புலன் உறுப்புக்கள் வழியாக அறியப் படுகின்றன. அதனைத் தொடர்ந்து தானியங்கு நரம்புச் செயலமைப்பு தன்னோடு இணைந்துள்ள பல்வேறு உறுப்புக்களை இயக்கி வைக்கின்றது. அதனால் உடலியக்கம் தொடர்பான பல்வேறு அருட்டல்கள் ஏற்படுகின்றன. திடீரென நிகழும் அருட்டல்களுக்கு உடலில் மேலதிக வலு வேண்டப் படுகின்றது. வேண்டிய நேரத்திலே சர்க்கரைச் சத்தைத் திடீரென வெளியிட்டுச் சக்தி வழங்கலை அதிகரிக்கும் செயற்பாடுகள் மனித உடலியக்கத்திலே காணப்படுகின்றன.

மேற்கூறிய செயற்பாடுகள் தானியங்கு நரம்புச் செயலமைப்புடன் தொடர்புடையவை. அது மத்திய நரம்புச் செயலமைப்பின் ஒரு பிரிவாகும். மனவெழுச்சி ஏற்படும் பொழுது தானியங்கு நரம்புச் செயலமைப்பு இயங்கத்



தொடங்கும். தானியங்கு நரம்புச் செயலமைப்பை இரு பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவை:-

(அ) பரிவு நரம்புச் செயலமைப்பு

(ஆ) எதிர்ப்பரிவு நரம்புச் செயலமைப்பு

எதிர்ப்பரிவு நரம்புச் செயலமைப்பு சாதாரண நிலையில் மனிதரின் உடலியக்கங்களிலே சமநிலையை ஏற்படுத்துகின்றது. மனிதர் நெருக்கடி நிலையை அடையும் பொழுது பரிவு நரம்புச் செயலமைப்பு இயங்கத் தொடங்கும். நெருக்கடி நேரத்தில் வேண்டப்படும் மிகையான வலுவைப் பரிவு நரம்பு மண்டலத்தின் இயக்கங்கள் வழங்குகின்றன.

பரிவு நரம்புச் செயலமைப்பும் எதிர்ப்பரிவு நரம்புச் செயலமைப்பும் முரணியல்புகளைக் கொண்டவை. ஒன்று செயற்படும் பொழுது மற்றையதன் தொழிற்பாடுகள் தடைப்படுகின்றன. அசாதாரண ஒரு நிலையில் மனிதனது தொழிற்பாடுகளை உருவாக்குவதற்குரிய தேவை நீண்ட வரலாற்றுக் காலங்களிலே நிகழ்ந்த வாழ்க்கைப் போரினால் மனித குலத்துக்குக் கிடைத்த உடலியக்கத் தொழிற்பாடாகும். இவற்றின் அடிப்படையாகவே மனவெழுச்சிக்கும் அழகுக்குமுள்ள தொடர்பு தெளிவாக விளக்கப்பட முடியும். மனிதர் உழைப்பைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்ல நேரிட்டது. அவ்வேளையில் நிகழ்ந்த வெற்றி மகிழ்ச்சியாய், அழகாய்,

மீண்டெழுந்து சுவை தரும் நயமாய் அமைந்தது. வாழ்க்கை முறைமை வழியாக எழும் நெருக்கடி களிலே அச்சமும், சினமும், கவலையும் எழுந்தன. வாழ்க்கைப் போரிலே நின்று நிலைப்பதற்குரிய போர்க்குணத்தோடு மனவெழுச்சிகள் இணைந் துள்ளன.

இனிமையான மனவெழுச்சிகள், அழகு தருகின்றன. மகிழ்ச்சி, களிப்பு, அன்பு, காதல் போன்ற இனிய மனவெழுச்சிகள் அழகைத் தூண்டுகின்றன. இனிமை தராத மனவெழுச்சி களும் அழகைத் தருகின்றன. ஏனெனில் அவை வாழ்க்கைப் போரின் வெற்றிக்கும், முரண்பாடு களின் புரிந்துணர்வுக்கும், உறுதுணையாக நிற்கின்றன, துன்பியல் இலக்கியங்கள் துன்ப நீக்கத்திற்கான திறவு கோல்களாயிருத்தலால் அவை திருப்தியையும் அழகையும் தரும்.

அன்பும் காதலும் மனித வாழ்வின் தொடர்ச்சிக்கு இன்றியமையாது வேண்டப் படுகின்றன. முரண்பாடுகளின் அடியொற்றிப் பிறக்கும் நெருக்கடிகளில் நின்று நிலைப் பதற்கும், இனப்பெருக்கத்திற்கும் உரியவாறு வரலாற்றுத் தொடர்ச்சியில் மனிதர் பெற்றுக் கொண்ட திறன்களாக அன்பும் காதலும் அமை கின்றன, அவ்வாறு வாழ்வுப் பிணைப்புடன் இணைந்த மனவெழுச்சிகள் அழகைத் தூண்டு கின்றன. மனவெழுச்சிகளும் அழகியலுக்குமுள்ள தொடர்பு நெருக்கடி எதிர்வினைகளாலும் விளக்கப்படும்.



மனவெழுச்சிகள் நெருக்கடி எதிர்வினை களாகத் தொழிற்படுகின்றன. இக்கட்டான ஒரு நிலையில் நெருக்கடியினை எதிர்த்து வெல்வதற்கு இந்த எதிர்வினைகள் உதவுகின்றன. தனியாகவும் தொகுதி தொகுதியாகவும் காணப்படும் எதிர் வினைகள் மனவெழுச்சியின் போது ஒரு பொது இலக்கைக் கொண்டு செயற்படும் ஒன்றிணைப் பைப் பெறுகின்றன. இந்த நிலை அழகு முகை யவிழ்க்கும் நிலையாகின்றது. மனவெழுச்சி குன்றிய அல்லது அற்றுப்போன நிலையிலுள்ள உளநோயாற் பீடிக்கப் பட்டவர்களிடத்து அழகுணர் திறனும் பாதிக்கப்பட்டிருக்கும்.

அழகுணர்திறன் என்பது உடல் நலத்தையும், சூழலையும் பொறுத்துள்ளது என்பதைச் சுட்டிக் காட்ட வேண்டியுள்ளது. அமுக்கப்பட்டிருக்கும் மனவெழுச்சிகள் திடீரென வெளிப்படும் பொழுது ஏற்படும் உடலியக்கச் சமநிலையானது மகிழ்ச்சி யையும், அழகுணர் திறனையும் ஏற்படுத்து கின்றது. கலையாக்கங்களின் உயரிய இலக்கு சாந்தியும் சமநிலையும் என்று கூறுதல் ஈண்டு நினைவு கொள்ளத்தக்கது.

# அழகியலும் உணர்வுகளும்

மத்தாப்புப் பொறிகள்
இன்னமும் ஆறுத
சுடு மணலில்
ஓர் அருவி — அது
கருத்தைத் தெளிவிக்கும் புனல் —

சமூக யதார்த்தங்களிலிருந்து உணர்வுகள் தெறித்து வருகின்றன. கலை இலக்கியங்கள் தொடர்பான அறிகையானது சுவைஞர்களது கோட்பாடுகள் தொடர்பான அமைப்புக்களிலே மாற்றங்களை வருவித்தல் வேண்டும்.

கலை இலக்கியங்கள் வாயிலாக உணர்வுகளை உருவாக்கும் செயல்முறை வர்க்க சார்புடையது, உருவாக்கப்படும் உணர்வுகளைப் பகுத்தாராய்ந்து கோட்பாட்டு வடிவிலான தெளிவை ஏற்படுத்தல் வேண்டும். வர்க்கத்தின் கருத்துநிலை, வர்க்க ஒருச்சாய்வு முதலியவற்றுக்கிடையே உள்ள தொடர்புகளை விமர்சித்து நோக்கும் உணர்வு



அழகியலின் ஒருங்கிணைந்த பண்பு. இது சுவைஞரின் 'உள்ளத்து ஒளியூட்டும் பண்பு' என்றும் கூறப்படும்.

உணர்வுகள் மனிதரின் உள்ளார்ந்த பண்புகள் அன்று; அவை என்றும் ஒரே வடிவினதான நித்தியப் பொருள்களும் அன்று. அவை மாற்றவும், திருத்தவும், மீள் அமைக்கவும் படத்தக்கவை. கலை இலக்கியங்கள் ஏற்படுத்தும் கோட்பாட்டு வடிவிலான மீளாக்கம் உணர்வுகளிலே மாற்றங்களைப் பிறப்பிக்க வேண்டியுள்ளன.

விமர்சனத்தின் முன்பு உணர்வுகளை நிலைநிறுத்த வேண்டும். விமர்சனமில்லாத உணர்வுகளைத் தூண்டும் கலை இலக்கியங்கள் சத்தும் சுவையுமற்ற சோடனைகளாகவே இருக்கும். சுவைஞர்களது உளநிலை, தீர்மானங்களை நோக்கி நகர்த்தப்படல் வேண்டும். பொய்ம்மைகள் அறியப்படும் பொழுது. உணர்வுகள் மேலும் புடமிடப்படுகின்றன. வெகுசனப் பண்பாட்டின் வளர்ச்சியும், அவை ஆகும் வர்க்கத்தின் கருவிகளாக இருத்தலும் மக்களின் உணர்வுகளை எதிர்க்கோணத்தில் வருடியெடுத்து விடுகின்றன. இந்நிலையில் எதிர்க்கோண உணர்வுகளை உருவாக்கும் பொய்ம்மைகள், கலை இலக்கியங்களிலே தெளிவாக்கப்படல் வேண்டும்.

அழகியல் என்பது உணர்வுகளைச் செப்பனிடுதலாக அமைதல் வேண்டும். உணர்வுகளைச் செப்பனிடுதற்குக் கருத்துநிலை துணை செய்

கின்றது. வெகுசனப் பண்பாட்டை வளர்க்கும் கலை இலக்கியங்களிற் காணப்படும் கருத்துநிலைப் பொருத்தப்பாடின்மை என்ற பண்பு உணர்வு களைச் செப்பனிடுவதற்குப் பதிலாக சின்னு பின்னப் படுத்தியும் விகாரப் படுத்தியும் விடுகின்றது. கருத்து நிலையிலே தெளிவின்றி, வாழ்விற் காணப்படும் அநீதிகளை அச்சொட் டாக இலக்கியங்களிலே பிரதிபண்ண முற்படும் பொழுது, அவை அழகியலிலே தளம் மாற்றும் தீவிரவாதமாக உருவெடுக்கும். அவற்றால் உரு வாக்கப்படும் உணர்வுகள் பதகளிப்பை (அங்சயற்றி) உருவாக்குமேயன்றி கருத்துநிலை வளர்ச்சியிற் சீரிய பங்குகொள்ள மாட்டா. சராசரியான தமிழ்த் திரைப்படங்களில் உரு வாக்கப்படும் 'அதிர்ச்சி' என்ற உணர்ச்சி மேற் கூறிய பண்புக்கு எடுத்துக் காட்டாகும்.

சராசரியான தமிழ்த் திரைப்படங்களினதும், நாவல்களினதும் விற்பனை இலக்கு மாந்தராக மத்திய தர வகுப்பினரே அமைகின்றனர். அந் நிலையில் பிராய்டிச உணர்வுகளைத் தூண்டுதல் அவர்களிடத்துக் கூடிய கவர்ச்சியை விளைவிக் கின்றதென்று கூறுவோரும் உளர். பிராய்டிச உணர்வுகள் என்பவை பாலியலுடன் தொடர் புடைய ஆழ்மனக் கோலங்கள் ஆகும். கலை இலக்கியங்களால் வலிந்து அருட்டப்படும் ஒரு வித அதிர்ச்சியானது ஆழ்மனக் கோலங்களை வெளிக் கொண்டு வந்து உணர்வுகளுக்குச் சிகிச்சை அளிக்கின்றது என்பது மிகவும்



மேலோட்டமான அழகியல் வாதமாகின்றது. ஒரு சில உளக்கோளாறு கொண்டவர்களின் உணர்வுகளை அழகு நயப்போர் அனைவருக்கும் பொதுமைப்படுத்தி விட முடியாதுள்ளது.

உணர்வுகளுக்குரிய தத்துவமான மொழிப் பரப்பு வேண்டுமா என்ற வினவும் எழலாம். மொழி என்ற பெருந்தொகுதியிலே மனித தேவைகளுக்குரிய பல்வேறு மொழிக்கோலங்கள் காணப்படுகின்றன. அவற்றுள் உணர்ச்சிக்குரிய மொழிக் குறியீடுகளைத் தெரிவு செய்தல் கலை யாக்கத் திறனிலே தங்கியுள்ள செயற்பாடாகும். இதனை வெறும் பொறிமுறையாகச் செய்ய முடியாது. வாழ்வியல் அநுபவப் பிணைப்பின் வழியாகவே மொழித் தெரிவு மேற்கொள்ளப் படல் வேண்டும்.

கலைஞனது உணர்வுகளும், சுவைப்பவனது உணர்வுகளும் சமநிலை கொள்வதற்கு இரு சாராரும் ஒரே சமூகப் பிணைப்புடையோராய் இருத்தல் வேண்டப்படுகின்றது. அல்லாவிடில் ஒருவரது உணர்ச்சி மற்றவருக்கு இரவற் பண் புடையதாகி விடும்.

உணர்ச்சிகளை மட்டும் நயந்து கொண் டிருத்தல், ஒருவித பழைமைப் பண்பைக் கலை இலக்கியங்களுக்கு வழங்கி விடுகின்றது. இந்தத் தேக்க நிலையிலிருந்து விடுபடுவதற்குக் கருத்து நிலைப்பாடு வழியமைக்கின்றது.

# ஆளுமையும் அழகியலும்

**ஓவியனே —**
**நீ வரையும் பூக்கள்**
**தனித்துவச் செடிகளின்**
**வாழ்க்கைப் புன்னகைகள்.**

மனிதன் தொடர்பான மர்மங்களும் இரகசியங்களும் உளவியல் எல்லைகளினுற் கட்டுப்பட்டிருக்கவில்லை. அதாவது உளவியல் நிச்சயவாதம் என்பது இறைமை கொண்ட செயல் அன்று. வரலாற்றுப் பொருள் முதல்வாத ஆதாரத்தின் மீது கட்டியெழுப்பப்படும் பொழுது மட்டுமே மனித உடைவையும், முழுமையையும், ஆளுமைப் பொலிவையும், துலக்கும் இயலாக உளவியல் பரிணமிக்க முடியும்.

அழகியலையும் உளவியலையும் தொடர்பு படுத்தும் பொழுது இந்த முன்மொழிவை மறந்து விட முடியாதுள்ளது. தனி மனித நடத்தைகளை விளக்குவதில் முதன்மை பெறும்



உளவியல், முழுமனிதத் தொடர்புகளையும் தனித்து விளக்க முடியாத முதிரா நிலையில் நிற்கின்றது.

தனி மனிதனுக்குரிய குணமும், தனித்துவமும், ஏக்கமும், இரக்கமும், சமூகத் தொடர்புகளினுலும், வரலாற்றினுலும் தீர்மானிக்கப் படுகின்றன. ஒவ்வொரு விதமான சமூக ஆக்கமும், அதற்கென உரிய மனித தனித்துவங்களை மலர்விக்கின்றன. வரலாற்றுப் பொருள் முதல் வாத ஆதாரத்திலிருந்து இவ்வாறு தான் ஒரு தொழிலாளியின் உளப்பண்பு அமையும் என்று அவனை ஓர் அச்சுப் பிரதி போன்று அமைத்தல் பொருந்தாது. வரலாற்றுப் பொருள் முதல் வாதம் தொழிலாளியின் உளச் செயற்பாடுகளை அறிவதற்குரிய தருக்கமாக அமைகின்றது என் பதை ஆளுமையிலும், அழகியலிலும் வற்புறுத்த வேண்டியுள்ளது. அது தருக்கமேயன்றி செங் கோல் செலுத்தும் ஆசான் அன்று.

தனிமனித நடத்தைகளை விளக்குவதில் உளவியலை முற்றிலும் புறக்கணித்து விட முடியாது. உளநெருக்குவாரங்களைத் தணித்தல், விருப்பங்களை நிறைவேற்றுதல் என்ற இரண்டு இயக்கச் செயல் முறைகளும் மனிதனிலே செயற் பட்ட வண்ணமிருக்கும். தேவைகளில் இருந்து செயற்பாடுகள் உருவாகும். செயற்பாடுகள் மீண்டும் தேவைகளை உருவாக்கும்.

மார்க்ஸிசம் தேவைகளை அடிநிலையாகக் கொள்ளாது, உழைப்பை அடிநிலையாகக் கொள்ளுகின்றது. உழைப்போடு இணைந்தது உற்பத்தி. உற்பத்தியின் வழியாகவே நுகர்ச்சித் தேவைகள் உருவாக்கப்படும். முதலாளித்துவ சமூகங்களில், வாழ்க்கையிலிருந்து உற்பத்தி வழிமுறைகள் பிரித்து வைக்கப்படுகின்றன. இதனால் உற்பத்திச் செயற்பாடுகள் அன்னியமாக்கப் படுகின்றன. ஒருவன் தன்னைப் பூரணமாக வெளிப்படுத்த முடியாத நிலையிலே தவிக்கின்றான். இந்நிலையிலே 'தேவை தணித்தல்' என்ற சுருங்கிய நிலையில் மட்டும் மனிதனது தொழிற்பாடுகள் நிகழ்கின்றன.

இதுவரை உளவியலில் நிகழ்த்தப் பெற்ற ஆய்வுகள் மனித நடத்தைக் கோலங்களையும் அதற்கு அநுசரணையாக அமையும் உள்ளத்தின் தொழிற் பாடுகளையுமே பெருமளவு நோக்கி வந்துள்ளன. அதனை மேலும் விரிவுபடுத்த வேண்டியுள்ளது. மனிதனது தொழிற்பாடுகளுக்குரிய சமூகத் தொடர்புகள் ஆராயப்பட வேண்டியுள்ளன. உற்பத்தி உறவுகளுடன் மனிதன் கொண்ட தொடர்பு, உற்பத்தி விசைகளுடன் அவன் கொண்ட உறவு என்பவை ஆராயப்பட வேண்டியுள்ளன. ''பாரம்பரியம்'', ''சூழல்'' என்ற மரபு முறையான ஆய்வுத்தடங்களில் இருந்து உளவியல் பிய்த்துக் கொண்டு வெளிவர வேண்டியுள்ளது. உளவியல் நிலைப்பட்ட அழகியலும், மேற்கூறிய மட்டுப்பாடுகளில் இருந்து வெளிவர வேண்டியுள்ளது.



அவ்வாறான ஒரு பின்னணியில் மனித ஊக்கலை விளக்கவந்த பிராய்டிசமும், வரலாற்றுப் பொருள் முதல் வாதமும் மிக இலாவகமாக ஒன்றிணைக்கப் படலாம் என நவபிராய்டியர் கூறுவர்.

உடைந்த மனித உள்ளங்களை முழுமையான மனித உள்ளங்களாக மாற்றுகின்ற சர்வாம்சம் பொருந்திய பணிகளை உளவியலாளன் மேற்கொள்ள வேண்டியுள்ளது. இந்தப்பணி பொருள் உற்பத்திப் பண்புகளால் மட்டுமன்றி அரசியல், உளவியல், அழகியல் ஆகியவற்றால் நிறைவு செய்யப்பட வேண்டியுள்ளது.

அழகியலும், உளவியலும் பல்வேறு பண்புகளுடன் இணைந்த தொடர்புறும் பொருள்கள். முழுமை பொருந்திய மனித ஆளுமை அனைத்துப் பண்புகளாலும் பூரணமாக்கப்பட்ட தொடர்புகளால் உறுதி செய்யப்பட வேண்டியுள்ளது. சுரண்டல் அற்ற தொடர்புகளின் வழியாகவே மனிதனுடைய தனித்துவமும் கலையாக்கங்களின் தனித்துவமும் மேலோங்க முடியும்.

சமூக அவலங்கள் தனிமனிதன் மீது நேரடியாகத் தெறித்து நிற்கும். சமூகக் கொடுமைகளின் குறிகாட்டியாகத் தனிமனிதன் துலங்குவான். இந்நிலையில் தனிமனிதனே உடனடி நோக்கற் பொருளாக அமைதல் வியப்பன்று. ஆனால் உளப்பகுப்பு வாதம், நடத்தை வாதம், போன்றவை தனிமனித ஆய்வுகளோடு தமது பணியினை நிறுத்திக் கொண்டமை, அவ்வாதங்களின் எல்லைகளைக் கட்டுப்படுத்தி விட்டன என்பதைச் சுட்டிக் காட்ட வேண்டியுள்ளது.

# அழகியலும் இயங்கியலும்

**புதியதொரு**
**காவியப் புன்னகையின் வேர்கள்**
**இன்னமும்**
**இந்த வரலாற்றில்**
**நீர் அள்ளும் —**

நேர்வுகளோடு கலை இடைவினை கொள்ளுகின்றது. நேர்வும் கலையும் ஒன்றன் மீது மற்றையது செல்வாக்குச் செலுத்தும் விதம் கலையின் சமூகச் செயற்பாட்டைத் தீர்மானிக்கும், மனிதனையும்அவனது சமூக இருப்பையும் கலை விசாரணை செய்கின்றது. கலையின் அறிவு சார் தொழிற்பாடும் அழகியல் சார் தொழிற்பாடும் வேறுபிரிக்க முடியாதவை.

உணர்வுகளில் மிக உறுத்தும் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணும் கலையாக்கத்தினை கலைஞன் உருவாக்குகின்றான். உண்மையைக் கண்டறிதல் அவனது தலையாய நோக்காகும். கலைஞனது இலட்சியமும் இலக்கும் வரலாற்று இயக்கங்களினால் விளக்கப்பட முடியும்.



நேர்வுகளை வெளிப்படுத்துவதற்குரிய கருவிகளை கலை உருவாக்கியுள்ளது. நேர்வுகளுக்கு வியாக்கியானம் செய்யும் கலைஞனது தொழிற்பாடு இயங்கியல் வயப்பட்டது. பல்வேறு காரணிகள் அங்கு தாக்கம் விளைவிக்கின்றன. வாழ்வின் உண்மையும் கலையின் உண்மையும் வேறு பிரிக்க முடியாதவை. வாழ்வின் யதார்த்த வகை மாதிரியிலிருந்து எதனைத் தெரிதல், எங்கிருந்து ஆரம்பித்தல் ஆகியவை கலைஞனது சுதந்திரத்துக்குரியவை.

யதார்த்தத்திலிருந்து தெரிந்தெடுக்கப்படும் வகை மாதிரி கலைப் பொருளின் கருவாக அமைகின்றது. அறிகைக்குரிய வலுவை அது கொண்டுள்ளது. இந்த வகை மாதிரி கலைப் பொருளுக்கும் யதார்த்தத்திற்கும் இணைப்பை ஏற்படுத்துகின்றது. உண்மை போலத் தோன்றும் பொய்ம்மைகள் காட்டப்படும் பொழுது இந்த இணைப்பு அறுபட்டு விடுகின்றது.

வாழ்க்கை பற்றிய கலைஞனின் நோக்கு வாழ்க்கைச் செயல் முறையில் அவன் கொள்ளும் பங்கு முதலியவை கலைப் படைப்பின் தன்மையைப் பாதிக்கும். கலைப் படைப்பு செழுமை பெற கலைஞனின் வரலாற்று நோக்கு வழியமைக்கின்றது. நிஜ வாழ்க்கையை விட்டுத் தடம் புரளாது நிற்பதற்கும் வரலாற்று நோக்குத் துணையாக விளங்குகின்றது. வரலாற்று நோக்கு என்பது ஒரு பாடநெறி என்ற சுருங்கிய

கருத்தில் அழகியலிற் பயன் படுத்துவதில்லை. நிஜ வாழ்க்கையின் புரிந்துணர்வும், வாழ்வின் இயங்கியலும் வரலாற்று நோக்கு எனப்படும். நேர்வுகளைத் தெரிந்தெடுத்து, மிக முக்கிய நிகழ்ச்சி மீது கவனத்தை மேற்கொண்டு, நுட்பமான விபரங்களை உள்ளடக்கி, விளங்கக் கூடிய படிமங்களால் வெளிப்படுத்துதல் அழகாக அமையும். பாத்திரங்களின் வார்ப்பும், விருத்தியும் வரலாற்று வளர்ச்சியின் விளைவு என்பதன் தருக்கத்தைக் கலைகளிலே கண்டறிதல் கலைஞனது வரலாற்றுணர்வை வெளிப்படுத்தும். கலைஞனது வாழ்க்கையறிவின் ஆழம், கலையழகை மேம்படுத்துகின்றது.

வாழ்வின் நேர்வலு எதிர்வலு என்பவற்றுக்கிடையிலான மோதல் கலைஞனால் தேடிக் கண்டு பிடிக்கப் படுகின்றது. எதிர்வலுவின் வெற்றி சோகம் நிரம்பிய உணர்வுகளை மீட்கின்றது. எதிர்வலுவை ஆழ்ந்து நோக்குதலும், அவற்றின் வெவ்வேறு வடிவங்களை இனங் காணுதலும் கலைஞனின் தேடலாகவுள்ளன. எதிர்வலு தொடர்பான கலைஞனது கண்ணோட்டம் விருத்தியடைய அவற்றுடன் அவன் இணங்கிச் செல்ல முடியாத உளத்திட்டம் மேலோங்கும். அந்நிலையில் அவன் படைக்கும் கலைப்பாத்திரங்களிற் கூடியளவு முழுமையும் நிச்சயமும் காணப்படும். ஆளுமையின் ஒருங்கிணைவு, தூய்மை, மேம்பாடு அடைந்த உள்ளம் முதலியவை துலங்கும்.



இவற்றின் தொடர்ச்சியிற் பாத்திரங்களை மிகைநிலை உணர்வுகளுக்கு அழைத்துச் செல்வதும், சம்பவங்களின் எல்லைகளுக்குக் கொண்டு செல்வதும் நிகழலாம். கதாபாத்திரங்கள் தொடர்பான உளவியல் ஆழம் அவை ஆவணத்தன்மைக்கு அண்மித்து நிற்பதனாற் பெறப்படும். அதாவது ஒருவரது உளக்கோலங்களின் வேர்கள் யதார்த்தத்திலேயே புதைந்து நிற்கும். நாட்டார் கலைகளில் இதன் தொடர்ச்சியை வெகு எளிதாகக் காணலாம்.

'முழுமை' என்பது அழகியலின் தவிர்க்க முடியாத பண்பு. கலைப்பொருள் முழுமை அடைவதற்கும் கற்பனை வேண்டப்படுகின்றது. மறைந்து நிற்கும் தொடர்புகளை இணைப்பதற்கும், மறைபொருளைத் தரிசிப்பதற்கும் முடிவுகளை எதிர்பார்ப்பதற்கும் கற்பனை துணை செய்கின்றது. கற்பனையைத் திறம்படக் கையாள்வதற்கு வரலாற்று உணர்வு மேலும் கை கொடுக்கின்றது. படிமங்களின் முழுமை, படிமங்களின் உள்ளார்ந்த ஒத்திசைவு, வாழ்க்கையின் ஒருங்கிணைவு, முதலியவை அழகியலில் முழுமையை ஏற்படுத்தும். புதிய உலகம் ஒன்றைப் பற்றிய பண்புநிலையான நோக்கு அழகியல் முழுமைக்கு இன்றியமையாததாகும். அறிகை, எழுச்சி ஆகியவற்றை விளக்குதலும், ஒருங்கிணைத்துத் தொகுத்தலும் என்ற பண்பு முழுமையை உருவாக்கும்.

சமூகத் தோற்றப்பாடுகள் அளவிறந்தவை. அவற்றுக்கு முடிவில்லை. அனைத்துத் தோற்றப் பாடுகளையும் ஒரு கலைஞன் பயன் படுத்த முடியாது. தோற்றப் பாடுகளில் உறுத்தும் செறிவு கொண்டவற்றை அவன் தெரிவு செய்கின்றான். அகிலப்படுத்தும் திறனுடைய தோற்றப்பாடு கூடிய வினைத்திறனைக் கொண்டு இருக்கும். சாதாரண நிகழ்ச்சிக்கும் அசாதாரண நிகழ்ச்சிக்கும் இடையே தருக்க முறையான தொடர்புகள் காணப்படும். எத்தகைய சூழலில் சாதாரணமாக ஏற்படக்கூடிய ஒரு நிகழ்ச்சி அசாதாரண நிகழ்ச்சியாக மாறுகின்றது என்பதை மேம்பட்ட நுட்பத்துடன் காட்டுதல் கலைஞனது திறனிலே தங்கியுள்ளது. ஒன்றன் மேல் ஒன்றாகப் பதிந்து செல்லும் மன உணர்வுகள் கதாபாத்திரங்களின் உள்ளார்ந்த வலுவை அதிகரிக்கும். அது அசாதாரண நிகழ்ச்சியாக இருக்கலாம். ஆனால் அவற்றுக்கு வரலாற்றுத் தொடர்ச்சி உண்டு.

அழகியல் தொடர்பாக எழுப்பப்படும் இன்னொரு கருத்து 'காலத்தின் தூரம்' என்பதாகும். கடந்த காலம் பற்றிய அறிவை இத் தொடர் புலப்படுத்தும். நிகழ்ந்து முடிந்த காலத்தின் பல்வேறு பரிமாணங்களையும் அறிந்து இருந்தல் புதிய கலையாக்கங்களைச் செம்மைப் படுத்த உதவுகின்றது. புதிய புதிய வகை மாதிரிகளின் வடிவங்களைக் காணுவதற்குக் 'காலத்தின் தூரம்' உதவும். முன்னைத் தொடர்ச்சியிற் பின்னைப்புதுமை தங்கியுள்ளது.



உளவியல் சார்ந்த கதாபாத்திர வடிவமைப்பும் இவ்வாறான பின்னணியில் நோக்கப்பட வேண்டியுள்ளது. ஒரு பாத்திரத்தின் உளவியல் நடத்தை என்பது சமூகத்தோற்றப் பாடுகளால் நிர்ணயிக்கப்படுகின்றது. அதனைக் கலைஞன் உணரும் பொழுது ஆக்க வலு மேம் படுகின்றது. சமூக மாற்றத்தின் விசைகள் மனிதரின் உள்ளார்ந்த பண்புகளை வெளிப் படுத்துவதில் வேகங் காட்டுகின்றன. உள்ளார்ந்த பண்புகளை வெளியிடும் பொழுது மொழியிலே 'சக்திக்காப்பு விதி' தொழிற்படுகின்றது. குறைந்த வலுவுடன் கூடிய செயலை விளைவித்தல் இவ்விதியின் பண்பாகும். இந்நிலையில் அக உணர்வுகளை வெளியிடும் மொழி சிக்கனமான கவிதை நடையுடன் இணைகின்றது.

பொதுமை சார்ந்த குறியீடு கலை இலக்கிய வெளிப்பாட்டுக்கு அவசியம் என்பர். அவ்வாறாயின் புதிய ஓவியங்கள், புதுக்கவிதை முதலியவற்றிற் பொதுமை சார்ந்த குறுயீடுகளுக்குப் பகிலாக தனிமனித நிலைப்பட்ட குறியீடுகளே பெருமளவில் உண்டென்றும் விமர்சிக்கப்படுகின்றது. தனிமனித நிலைப்பட்ட குறியீடுகளின் ஊடாக அனைவரும் விளங்கிக் கொள்ளக்கூடிய பொதுமையான குறியீடுகள் படிமலர்ச்சி கொள்ள முடியும். பிக்காசோவின் தனிமனித நிலைப்பட்ட குறியீடுகளை அடியொற்றி அனைவரும் விளங்கக்கூடிய பொதுக்குறியீடுகள் நவீன ஓவியங்களிலே மலரத் தொடங்கியுள்ளன.

தோற்றப்பாடுகள், அரசியல்வாதியால் நோக்கப் படுவதற்கும் கலைஞனால் நோக்கப்படுவதற்கு மிடையே வேறுபாடுகள் உண்டு. கலைஞனது கற்பனையின் ஊடாக அதாவது கலைப்புலக் காட்சியின் ஊடாக தோற்றப்பாடுகளின் யதார்த்தம் நுட்பமாக அணுகப்படுகின்றது.

அழகியல் பற்றிய உளவியல் நிலைப்பட்ட நோக்கு பின்வரும் முடிவுக்கு அழைத்துச் செல்கின்றது.

பாத்திர வகைமாதிரி, கலைஞனது புலக் காட்சி, கலைப்பொருள் கூறவிளையும் உண்மை, அழகை வெளியிடும் முறைமை ஆகியவற்றுக் கிடையே இயங்கியல் இடைத் தொடர்புகள் தெளிவாகப் புலப்படும்.

# சமயக்கற்பனை

**மக்களை—**
**மகிழ்ச்சியாக வைத்திருப்பதற்கு**
**கடவுச் சீட்டுக்களை**
**யார் வழங்க முடியும்...?**

மனிதனுக்கே உரிய சிறப்பு அவனது கற்பனைத்திறன். பொதுவாக, கற்பனைத்திறன் மூவகை அருவிகளாகச் செயற்படும். அழகியற்



கற்பனை, அறிவியற் கற்பனை, சமயக் கற்பனை என்றவாறு கற்பனை அருவிகள் கிளைகள் பரப்பும். புனைதிறன் பரவசம் அவற்றிலே காணப்படும்.

அழகுப் பொருளின் ஆக்கத்தோடு இணைந்தது அழகியற் கற்பனை. கலை இலக்கியங்கள் அழகியற் கற்பனையின் வெளிப் பாடுகள்.

அறிவியல் எடுகோள்களின் அடிப்படையில் விரிவாகும் கற்பனை அறிவியற் கற்பனை. ஆர்தர் இ. கிளார்க் என்பாரின் எழுத்தாக்கங்கள் அறிவியற் கற்பனைக்கு எடுத்துக் காட்டுகள்.

சமய நம்பிக்கைகள், எதிர்பார்ப்புக்கள், விழுமியங்கள் என்பவற்றால் விரிவாக்கப்படும் கற்பனை, சமயக்கற்பனை. இது சமயம் சார்ந்த உளப்படிமங்களால் நிகழ்த்தப்படுகின்றது. அவ் வாறாயின் உளப்படிமம் என்றால் என்ன என்பதை முதற்கண் விளங்குதல் வேண்டும். புலன்கள் வழியாக மனித உள்ளத்திலே உருவாக்கப்படும் உளவடிவம் புலக்காட்சி என்றும் கூறப்படும். புலக்காட்சியை அறிகையின் அடிப்படை நிலை என்றும் கூறலாம். அறிகையின் மிக மேம்பட்ட நிலை உளப்படிமங்களாற் சிந்தனையைக் கட்டி யெழுப்பலாகும். இவற்றை மேலும் விளக்கலாம்.

புறவுலகிலுள்ள ஒரு பொருள் அல்லது நிகழ்ச்சி, மனிதனது புலன்களைப் பாதிக்கும் பொழுது தோன்றுவது புலன் உணர்ச்சி

எனப்படும். அவ்வாறு தோன்றும் புலன் உணர்ச்சிக்குப் பொருள் அமைத்தல் புலக்காட்சி எனப்படும். ஓர் இனிய ஓசை எமது செவியை வந்தடைகின்றது. அந்த ஓசைச் சுவையானது புலன் உணர்ச்சிக்கு ஓர் உதாரணம். யாரோ ஓர் அழகிய மங்கை பாடுகிறுர் என்று பொருள் கொள்வது உள்ளத்திலே உருவாக்கப்படும் புலக் காட்சி.

இனிய ஓசையும் அந்த இனிய ஓசையை உருவாக்கிய மங்கையும் இன்றி, அவற்றைப் பற்றிய காட்சிகளை உருவாக்குதல் உளப்படிமம் என்று கூறப்படும். கழிந்து சென்ற துன்பங்களும், இன்பங்களும் படிமங்களாக மனத்திலே நின்று உலாவருகின்றன. அவை அழகினதும் அநுபவங் களினதும் கருவிகளாகவுள்ளன.

படிமங்கள் பலவாறு பாகுபடுத்தப்படும். கட்புலன் வழியாக உருவாக்கப்பட்ட படிமம், செவிப்புலன் வழியாக உருவாக்கப்பட்ட படிமம், முகர்தல், தொடுதல் என்ற செயல்களால் உள்ளத்திலே தோற்றுவிக்கப்பட்ட படிமங்கள் என்றவாறு பாகுபடுத்தலாம்.

படிமங்கள் வாயிலாகக் கற்பனை உருவாக்கப் படும். அவ்வாருக மலரும் கற்பனை ''விளைவு'' செய்வதாகவோ, ''மீள் விளைவு'' செய்வ தாகவோ அமையலாம். சமயம் சார்ந்த கற்பனையில் மீள் விளைவு செய்தல் மேலோங்கி



நிற்கும். ஏற்கனவே பெறப்பட்ட படிமங்களை மீண்டும் மீண்டும் மனக்கண் முன் கொண்டு வந்து இன்புறல் மீள்விளைவுக் கற்பனையின் பாற்படும்.

பரத நாட்டியத்தில் இடம்பெறும் கற்பனைகள் மீள்விளைவு செய்தலுக்குச் சிறந்த எடுத்துக் காட்டுகளாகும். கண்ணனுகவும் ராதை யாகவும் ஏற்கனவே கண்ட படிமங்கள் மீட்டுப் பார்த்தலினுற் கற்பனை இன்பம் விரிவு செய்யப் படுகின்றது.

தேவாரங்களின் இசைப்படிமங்கள் காட்சிப் படிமங்கள் என்பவற்றை மனத்திரையில் மீள வருவித்துச் சமயக் கற்பனையின் வாயிலாக உளத் திருப்தி கொள்வாரும் உளர். மீள் விளைவானது நினைவுத் திறனுடன் இணைந்து நிற்கும். நினைவுத் திறன் வல்லாரும் வளர்ப்போரும் மீள் விளைவுக் கற்பனையில் மேலோங்கியோராய் விளங்குவர்.

சமயங்களில் இடம்பெறும் இசை, மீள் விளைவுக் கற்பனையை வளர்க்கத் துணை நிற்கின்றது. 'இசையிலே சஞ்சரித்தல்', 'இசைக் கற்பனை' 'நாதரூபங்களில் நயத்தல், 'ஓசையின் உன்னதங்கள்,' 'மந்திரம் போலும் சொல் லின்பம்' என்ற தொடர்கள் இசையால் மீட் டெடுத்து விளைவு செய்யப்படும் கற்பனை வடிவங்களைக் குறிப்பிடுகின்றன.

'மீள்விளைவுக் கற்பனைகள்' மாத்திரமன்றி விளைவுக் கற்பனைகளும் சமயங்கள் வாயிலாக உருவாக்கப் படுகின்றன. ஏற்கனவே உருவாக்கப் பட்ட பழைய உளப்படிமங்களைப் புதிய முறையிலே அமைத்தல் 'விளைவுக் கற்பனை' எனப்படும். புதியதொரு வடிவத்தையாக்குத லுடன் விளைவுக் கற்பனை தொடர்பு கொண் டுள்ளமையால் அதனைப் படைப்புக் கற்பனை என்றும் உளநூலார் குறிப்பிடுவர்.

புதிய புதிய கலைவடிவங்கள், இலக்கியங்கள், சமயப் பரப்பிலே தோற்றுவிக்கப் படுகின்றன. சமயம் சார்ந்து எழும் விளைவுக் கற்பனைகளிற் ''பயன் கொள் நெறி'' மேலோங்கி நிற்கும். அதாவது, சமய இலக்குகளை அடைவதே அவ் வாறான கற்பனையின் உன்னத இலட்சியமாக அமையும். சமயக் கற்பனை நடத்தைக் கட்டுப் பாட்டுக்கான கருவியாக செயற்படுகின்றது. கற்பனையை வழங்குபவரும், சுவைப்பவரும் குறித்த ஒழுக்கக் கட்டுப்பாடுகளை மேற் கொள்ளும் வண்ணம் தூண்டுவனவாக அவை கட்டியெழுப்பப்படும் அவற்றுடன் மன வெழுச்சிகள் இணைந்தும் குமைந்தும் இருக்கும்.

கற்பனையை உருவாக்கும் கலைக்கூடங்களாக இயற்கையும் சமூகமும் அமைகின்றன. தெரிந்த வற்றிலிருந்தே கற்பனை நிகழத் தொடங்கும். அறியாத தொன்றை அல்லது தெரியாத தொன்றைப் பற்றிக் கற்பனை செய்யும் பொழுது, தெரிந்த அலகுகளே துணையாக அமைகின்றன.



பூமி, சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள் ஆகிய தெரிந்த அலகுகளை வைத்தே அறியாப் பிரபஞ்சவெளி பற்றிய கற்பனை முகிழ்த்தெழு கின்றது. தெய்வங்களுக்கு மனித வடிவங்கள் கொடுத்தல் தெரிந்த அலகுகளில் இருந்து கற்பனை நதி ஊற்றெடுப்பதைத் தெளிவு படுத்துகின்றது. ''பால் நினைந் தூட்டும் தாயினும் சாலப் பரிந்து'' என்றவாறு தெரிந்த வடிவிலிருந்து தேடல் தொடங்குகின்றது.

விளைவுக் கற்பனையின் பிறிதொரு தொழிற் பாடு 'இணைத்தல்' அல்லது பொருத்துதல் என்பதன் வாயிலாகப் புதிய ஆக்கம் ஒன்றை ஏற்படுத்தலாகும். விலங்குகளுக்கு மனிதரின் தலையை இணைத்தல், மனிதருக்கு விலங்குகளின் தலையைப் பொருத்திப் பார்த்தல் முதலியவை சமயம் சார்ந்த புராணக் கற்பனைகளிலே காணப்படுகின்றன. இவ்வாறான கற்பனைகள் மனிதரின் உற்பத்தித் தொழிற்பாடுகளுடன் இணைந்த அநுபவங்களாகும். கருவிகள் இயற்று வதற்கு மனிதர் பல்வேறு இணைப்புக்களைக் கையாள வேண்டியிருந்தது. உதாரணமாக இரும்பு அலகுடன் மரப்பிடியைக் கொண்ட கோடரி, கத்தி, மண்வெட்டி போன்ற கருவிகளை வெகு இலாவகமாகவும், வினைத் திறனுடனும் மனிதராற் பயன்படுத்த முடிந்தது. உற்பத்தி வாயிலாக எழுந்த இந்த நடைமுறை அநுபவம் புதிய புதிய இணைப்புக்களைச் சமயக் கற்பனைகளில் ஏற்படுத்தின.

உற்பத்தி முறைகள் பிரித்தெடுத்தலுடன் தொடர்பு கொண்டிருக்கும். உதாரணமாக பருத்தியிலிருந்து பஞ்சு பிரித்தெடுக்கப் படுகின்றது. மரத்திலிருந்து தானியம் பிரித் தெடுக்கப் படுகின்றது. பிரித்தெடுக்கப்பட்ட பொருள்கள் உருமாற்றப் படுகின்றன. பஞ்சு ஆடையாகின்றது. தானியம் உணவாக மாற்றப் படுகின்றது. சமயக்கற்பனைகளில் அகம் – புறம், உள் – வெளி, உடல் - மனம் என்றவாறு பகுப்பு மேற்கொள்ளப் படுகின்றது. திடீரென்று தோன்றும் காட்சிகள் உருமாற்ற அநுபவங் களுடன் இணைந்து நோக்கப்படத்தக்கவை.

மேற்கூறியவற்றைத் தொகுத்து நோக்கும் பொழுது, சமயக்கற்பனைகள் வாழ்க்கை இருக்கை யிலிருந்து ஊற்றெடுப்பதைக் காணலாம். எத்தகைய ஒரு சமூகத்திலும் என்றுமே மக்களை மகிழ்ச்சியாக வைத்திருப்பதற்குரிய கடவுச் சீட்டுக்களை வழங்க முடியாது. இந்நிலையிற் கலைஞனுக்கும், உளவியலாளனுக்கும், சமயங் களுக்கும், வேலைப்பளு அதிகரித்துக் கொண்டே செல்லும். கற்பனைகள் தொடர்ந்தும் இயக்கப் பட வேண்டிய உளப்பணிகளாக முன்னேறும்.

## மாதிரி ஆய்வு :

## சிறுகதை :

சிலிர்ப்பும் சிரிப்பும். செம்பரத்தம் பூ தனது மகரந்த மூக்கு நுனிகளை நீட்டி நிற்கும் இளங் காலை. இந்த மார்கழிப் பனி குளிர்ந்தாலும் அழகாகத்தான் இருக்கிறது. கருமையும் பச்சையும் கலந்த சாயத்தைப் பிழிந்து வெளிவீச முடியாமல் நிற்கும் இலைகளாற் காகங்களுக்கு என்ன லாபம். அவை சுள்ளித் தடிகளைத் தேடிக் கொண்டிருந்தன.

பதினைந்து வருஷத்துக்கு முன் மினுமினுப்பா யிருந்த வீட்டுமுற்றம் இப்போ வெளிறி விட்டதோ இல்லையோ. ஆனால் அப்போது பசுமையாயிருந்தது போன்ற ஓர் உணர்வுக் கீறல். அப்போது அதிகாலையிலே அருணகிரி திருப்பள்ளியெழுச்சி பாடி வருவார். பனிக்குளிர் அவருக்குப் படாது. மேல் முழுதும் விபூதியும் சத்தனமும் அப்பி இருக்கிற படியால் அவருக்குக் குளிர் பிடிக்காது என்று அண்ணை சொல்வார்

அருணகிரி மட்டுமென்ன? அவரது பக்க வாத்தியக்காரர் பக்கப் பாட்டுக்காரர் எல்லாரும் மேல் முழுவதும் விபூதியும் சந்தனமும் அப்பியிருப்பார்கள். மத்தளக்காரர் அம்பலம் தலையைச் சுழற்றிச் சுழற்றி ''டபடப'' என்று மத்தளம் வாசிப்பதைக் காண்பதே எங்களுக்குப் பெரிய குதூகலம். பனிக்குளிரைக் கீறிக் கிழித்துக் கொண்டு வருவதும் வராமல் இருப்பதும்போல் அருணகிரியின் குரல் பன்னீர் பூசும். எங்கள் வீட்டு ஒழுங்கை வளைவில் அந்தப் பஜனைக் கோஷ்டியைப் பார்த்துக் கொண்டு அதிகாலையில் நிற்பதும் ஒரே குதூகலம். அரிக்கன் லாம்பு, அருணகிரியின்குரல், மத்தளம், பனித்தூறல், இருள் எல்லாமே ஒன்று கலந்து ஒரு முழுமையாகித் தெப்பம் விடுதல் போன்ற, ஓர் உணர்வில் இடையிடையே சேமக்கலச் சத்தம் பிதிர்த்துக் கொண்டு வரும். அருணகிரியின் பஜனைக் கோஷ்டி போய் முடிந்ததும் மீண்டும் ஒருதரம் நித்திரை கொண்டு எழும்பினல் பள்ளிப் பாடங்களும் பரீட்சையும் பதகளிப்பை ஒவ்வொரு முழமாக உயர்த்திக் கொண்டு நிற்கும்.

அன்று அருணகிரியின் பஜனைக் கோஷ்டி போய் முடிந்ததும் தற்செயலாக ஒழுங்கையை ஒருகணம் பார்க்க நேர்ந்தது. ஒரு கரிய மனிதர். குளிரை உட்புக விடாது வலிந்து கட்டிய போர்வை. ஊசலாடும் கண்கள். நிலத்திற் பட்டும் படாமலும் நடக்கும் விரைந்த நடை.



அந்தச் சிறிய வயதில் எனக்கு ஒரு சந்தேகம். இவர் மனிதரா அல்லது ஆவிமனிதரா? மீண்டும் பார்க்கிறேன். அந்த மெல்லிய வெளிச்சத்தில் அவரது கண்கள் ஒரு துண்டு நெருப்புத் தணலின் இதழ்களாய்த் தெரிந்தன. சந்தியில் பஜனைக் கோஷ்டி வலப்புறமாகத் திரும்ப இந்த மர்ம உருவம் இடப்புறமாகத் திரும்பியது. ஓடிவந்து அண்ணனைக் கேட்டேன். ஆர் அந்த உருவம்?

எனது பயமும் ஆவலும் துடிப்பும் பற்றி அண்ணனுக்குக் கவலையில்லை.

''ஓ அதா, அதுதான் பெரியசாமி!''

''அதென்ன பெரியசாமி?'' ''அது இப்ப உனக்கு விளங்காது. மேல் வகுப்பில் படிச்சால் தான் விளங்கும்.''

இந்தப் பழைய கதை தூறலோடு தூறலாக ஓர் இலையில் விழுந்த கதிர்ப் பொட்டாக நின்றது. பல காலமாகக் கண்டியிலும் கொழும்பிலும் படித்தும் வேலை பார்த்தும் கழித்த நாட்களின் பின் இன்று மீண்டும் திருவெம்பாக் காலையில் வீட்டில் நிற்கும் ஒரு சந்தர்ப்பம். பஜனைக் கோஷ்டியை ஒரு தரம் பார்க்கிற ஆவலும் ஆசையும்.

வயது போன அருணகிரியாரின் குரல் இனங் காணக் கூடியதாக இருந்தாலும், பக்கப் பாட்டுக் காரருக்குத்தான் இப்போ வேலைகூட. முதல் அடியைத் தொடக்கிப் போட்டு அருணகிரியார் தாளம் போடத் தொடங்கி விட்டார். குளிரை இறுக்கிப் பிடிக்கக்கூடிய நல்ல இறுக்க

மான கம்பளிச் சட்டை அருணகிரியாருக்கு அழகு தந்தது. மத்தளக்கார அம்பலத்தின்ரை மகன் இப்ப ஜேர்மனியிலே. அவன் அனுப்பிய சிவப்பு ரீ சேட்டை அம்பலத்தார் போட்டு இருந்தார். முன்பு இருளோடுஇருளாகக் கரைந்து கொண்டிருந்த அவருடைய கறுத்தத் தலைமயிர் எல்லாம் உதிர்ந்து தலை இப்பொழுது கோழி முட்டை வழுக்கையாயிருந்தது. அரிக்கன் லாம்பு தூக்கும் இளசுகள் ஒருத்தரையும் இப்போ காணவில்லை. கொழும்பிலே உத்தியோகம் பார்த்து ஒய்வு பெற்ற மயில்வாகனத்தார் ஒரு பெற்றோமாக்ஸைப் பிடித்துக்கொண்டு வந்தார்.

''வீட்டு வாசலிலே ஒவ்வொருத்தரும் திருவெம்பா நாளிலே பூரண கும்பம் வைக்க வேணும். அல்லாட்டி பஜனை பாட வரமாட்டன் எண்டு அருணகிரி சொல்லிப் போட்டார்.'' இப்ப எல்லா வீடுகளிலும் பூரண எவர்சில்வர்க் கும்பம்.

பஜனை போய் முடிந்தது. எங்கே அந்தப் பெரியசாமி? அந்தப் பழைய நினைவில் மீண்டும் ஒரு கிழிசல். இருள் மினுங்காத காலையில் பெரியசாமியை ஆவலுடன் பார்த்தேன். நடை தளர்ந்த அந்தக் கிழடின் தடித்த போர்வையைக் காணவில்லை. முதுகு செங்கோணத்தை விட்டுச் சரிந்து விட்டது. கையிற் காவிபிடித்த அரிக்கன் லாம்பு. வழமைபோல சந்தியில் இடப்பக்கம் பெரியசாமி திரும்பிக் கொண்டது.—



மேற்கூறிய சிறுகதையின் அழகியற் பெறுமானங்களை உளவியல் நோக்கில் எவ்வாறு அணுகலாம். என்பதற்கு சில வினாக்கள் தரப்படுகின்றன.

அ. இதில் இடம் பெறும் முன்நினைவுப் பளிச்சீடுகளும், நனவிலி ஊக்கலும் அழகியற் பெறுமானங்களைக் கொண்டு உள்ளனவா?

ஆ. கதையில் இடம் பெறும் அகவுருவங்கள் அல்லது படிமங்கள் தூண்டுகின்ற கற்பனைகள் அழகு நயப்பைத் தருவதாயின் அவற்றைத் தவிர்க்க முடியாத அழகியல் உறுப்புக்கள் என்று கொள்ளலாமா?

இ. காலம் இடைவெளி பற்றிய காட்சி இக் கதையில் வருகின்றது. காலம் இடைவெளி ஆகியவற்றுடன் இணைந்த மன வெழுச்சிகள் அழகியலை வளம்படுத்தும் கூறுகள் என்று கொள்ள முடியுமா?

ஈ. கதை சொல்பவருக்கும் வாசிப்பவருக்குமிடையே யாதாயினும் இணங்க முடியாப் பண்பு காணப்படுகின்றதா? இந்நிலை கலையாக்கத்தைப் பாதிக்கின்றதா?

உ. உள்ளதை உள்ளவாறு கூறுது ஆக்கச் செறிவுடன் புனைதல் அழகுத் தூண்டியாக அமைய முடியுமா?

ஊ. கதையினூடாகத் தரப்படும் செய்தி வெளிப்படையான கருத்தேற்றம் போன்று தெரிகின்றதா? வெளிப்படையான கருத்தேற்றம் இல்லாமை அழகு தருமா?

எ. உள மொழியியல் என்பது நியமமான மொழியிலிருந்து வேறுபடலாம்.

உதாரணம்:-

**நியமமொழி:** அருணகிரியின் குரல் வெளி வரும்.

**உளமொழி:** அருணகிரியின் குரல் பன்னீர் பூசும்.

அவ்வாருயின் உளமொழியியல் அழகைச் சேர்க்குமா?

ஏ. சாதாரணமாக இணைக்கப்படாத எண்ணக் கருக்கள் ஒன்றிணைக்கப்படுவதற்கு மேற் கூறிய கதையிலிருந்து பெறப்பட்ட ஓர் எடுத்துக்காட்டு:

''மகரந்த மூக்கு''

இவ்வாறு உருவாக்கப்படும் தொடர்கள் கலையழகைத் தருகின்றனவா?

அழகு, உண்மையைத் தேடுவதாக மட்டும் அமைவதில்லை, அது மனிதனைத் தேடுகின்றது.